www.tolkappiyam.ca Email: tolcanada@gmail.com T.P: 647-881-3613

# "மாணவர்களுக்கான தொல்காப்பிய விநாடி-வினா" - வினாக்கொத்து

| | | |
|---|---|---|
| | **எழுத்துகள் - பொது** | |
| 1. | மொழியின் இரு வடிவங்கள் யாவை? | ஒலி வடிவம், வரி வடிவம் |
| 2. | ஒரு மொழியில் அடிப்படையான உயிர் ஒலிகள் எத்தனை? அவை யாவை? | 3 - அ, இ, உ |
| 3. | தமிழில் உள்ள முதல் எழுத்துகள் எத்தனை? | 30 |
| 4. | தமிழ் எழுத்துகளில் உயிர் எழுத்துகள் எத்தனை? | 12 |
| 5. | மெய் எழுத்துகள் எத்தனை? | 18 |
| 6. | தொல்காப்பியர் கூறும் சார்பு எழுத்துகள் எத்தனை? | 3 |
| 7. | சார்பெழுத்து என்று ஏன் அழைக்கப்படுகிறது? | தனித்து இயங்காத காரணத்தால் |
| 8. | தொல்காப்பியம் குறிப்பிடும் சார்பெழுத்துகள் எவை? | குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம் |
| 9. | உயிர் எழுத்துகளை எவ்வாறு பிரிக்கலாம்? | குறில், நெடில் |
| 10. | உயிர் எழுத்துகளைக் குறில், நெடில் என்று ஏன் பிரிக்கப்படுகின்றன? | ஒலிக்கும் கால அளவால் |
| 11. | மாத்திரை எவ்வாறு அளவிடப்படுகிறது? | கண்ணிமைக்கும் அல்லது கைநொடிக்கும் நேரம் |
| 12. | குறில், நெடில் என்று தீர்மானிக்கும் கால அளவின் பெயர் என்ன? | மாத்திரை |
| 13. | குறிலுக்கு எத்தனை மாத்திரை? | ஒரு மாத்திரை |
| 14. | ஒரு மாத்திரை கொண்ட உயிர் எழுத்துகள் எவை? | அ, இ, உ, எ, ஒ |
| 15. | நெடிலுக்கு எத்தனை மாத்திரைகள்? | 2 |
| 16. | ஒரு மெய்யெழுத்தின் மாத்திரை அளவு என்ன? | அரை |
| 17. | இரு மாத்திரை கொண்ட உயிர் எழுத்துகள் எவை? | ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ. |
| 18. | தனக்கு இயல்பான மாத்திரைகளை விட நீட்டி ஒலிக்கப்படுவதை எவ்வாறு அழைப்போம்? | அளபெடை |
| 19. | ஒலிப்பு முறை, பிறக்கும் இடம் ஆகிய காரணங்களால் உறவுடைய எழுத்துகள் எவ்வாறு அழைக்கப்படுகிறது? | இன எழுத்துகள் |

| | | |
|---|---|---|
| 20. | ஐ, ஔ ஆகிய எழுத்துகள் குறிலா நெடிலா? | நெடில் |
| 21. | ஐ, ஔ ஆகிய எழுத்துகளை வேறு வகையில் போலி எழுத்தாக எப்படி எழுதலாம்? | அய், அவ் |
| 22. | போலி எழுத்துகள் எவை? | அ+இ = ஐ, அ+உ = ஔ |
| 23. | தமிழில் உள்ள கூட்டெழுத்துகள் எவை? | ஐ, ஔ. |
| 24. | மெய்யெழுத்துகளுக்குரிய பொது வடிவம் என்ன? | புள்ளி பெறுவது |
| 25. | உயிர்மெய் எழுத்துகளில் முதலில் உச்சரிக்கப்படும் ஒலி எது? | மெய் ஒலி |
| 26. | மெய் எழுத்துகளை எவ்வாறு வகைப்படுத்தலாம்? | வல்லினம், மெல்லினம், இடையினம் |
| 27. | மெய் எழுத்துகளில் வல்லின எழுத்துகள் எவை? | க், ச், ட், த், ப், ற் |
| 28. | மெல்லின எழுத்துகள் என்று அழைக்கப்படுபவை எவை? | ங், ஞ். ண், ந். ம், ன் |
| 29. | இடையின எழுத்துகள் எவை? | ய், ர், ள், வ், ழ், ல் |
| 30. | வல்லின எழுத்துகளுக்கு இனமாக வரக்கூடிய எழுத்துகள் எவை? | மெல்லின எழுத்துகள் |
| 31. | எந்த வகை எழுத்துகளுக்கு இன எழுத்துகள் இல்லை? | இடையினம் |
| 32. | தமிழ் மொழியின் சிறப்பு எழுத்து என்று அழைக்கப்படும் எழுத்து எது? | ‘ழ’ கரம் |
| 33. | ள, ல எழுத்துகள் எந்த மெய் இன எழுத்து வகையைச் சார்ந்தது? | இடையினம் |
| | **சொல்** | |
| 34. | வினா எழுத்துகள் எவை? | எ, ஏ, யா, ஆ, ஓ |
| 35. | சுட்டு எழுத்துகள் எவை? | அ, இ, உ |
| 36. | ஆ, ஏ, ஓ சுட்டெழுத்துகளா வினா எழுத்துகளா? | வினா எழுத்துகள் |
| 37. | அ, இ, உ ஆகிய மூன்றையும் எந்தப் பெயரால் அழைக்கப்படுகிறது? | சுட்டு |
| 38. | சொல்லுக்கு முதலிலும் இறுதியிலும் வரும் வினா எழுத்து எது? | ஏ |
| 39. | தனி மெய்யெழுத்துகள் எந்தெந்த உயிர் எழுத்துகளோடு சேர்ந்து ஒலிக்கும்? | 12 உயிர் எழுத்துகளுடன் |
| 40. | ஒரு மெய் எழுத்தை அடுத்து இன்னொரு மெய் எழுத்து வருவது எவ்வாறு அழைக்கப்படுகிறது? | மெய்ம்மயக்கம் |
| 41. | மெய்யெழுத்துகள் தம்மை ஒத்த மெய்யெழுத்துகளுடன் சேர்ந்து மயங்கி வருவது எந்த மெய்ம்மயக்கம்? | உடனிலை மெய்ம்மயக்கம் |
| 42. | எந்தெந்த எழுத்துகள் இரட்டித்து வராது? | ர், ழ் |
| 43. | குறில் எழுத்துக்குப் பிறகு வராத மெய்யெழுத்துகள் எவை? | ர், ழ் |
| 44. | மெய்யெழுத்துகள் மொழிக்கு முதலில் வருமா? | இல்லை |
| 45. | சொல்லுக்கு இறுதியில் வரக்கூடிய க், ச், த், ப் ஆகிய மெய்யெழுத்துகள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன? | ஒற்று அல்லது சந்தி |

| | | |
|---|---|---|
| 46. | இரண்டு உயிர் எழுத்துகள் புணரும்போது தோன்றும் ய், வ் ஆகிய இரண்டு மெய்களும் எவ்வாறு அழைக்கப்படுகிறன? | உடம்படு மெய்கள் |
| 47. | உடம்படு மெய்கள் என்று அழைக்கப்படும் மெய்யெழுத்துகள் எவை? | ய், வ் |
| | **பிறப்பியல்** | |
| 48. | எழுத்துகள் பிறக்கும் இடங்கள், பிறக்கும் முறை போன்றவற்றைக் கூறும் இயலின் பெயர் என்ன? | பிறப்பியல் |
| 49. | எழுத்துகளின் பிறப்பிற்கு முதல் காரணம் என்ன? | உந்தியில் எழும் காற்று |
| 50. | எழுத்துகள் பிறப்பதற்குரிய துணை உறுப்புகள் எவை? | நெஞ்சு, மிடறு, தலை, மூக்கு மேல்வாய், உதடு, நா, பல் - 8 |
| 51. | எழுத்துப் பிறப்பில் இயங்கும் உறுப்புகள் எவை? | உதடு, நா, பல், |
| 52. | எழுத்துப் பிறப்பில் இயங்கா உறுப்புகள் எவை? | நெஞ்சு, மிடறு, தலை, மூக்கு மேல்வாய் |
| 53. | வாயின் வழியாகக் காற்று தடையில்லாமல் வெளிப்படுவதால் பிறக்கும் ஒலிகள் யாவை? | உயிர் ஒலிகள் |
| 54. | அங்காப்புடன் பிறக்கும் எழுத்துகள் எவை? | அ, ஆ |
| 55. | இதழ் குவிந்து பிறக்கும் உயிரெழுத்துகள் எவை? | உ, ஊ, ஒ, ஓ, ஔ |
| 56. | மேல் உதடும் கீழ் இதழும் (உதடும்) சேரப் பிறக்கும் எழுத்துகளைக் கூறுக. | ப், ம் |
| 57. | மேற்பல்லும் கீழ் இதழும் (உதடும்) சேரும்போது பிறக்கும் எழுத்து எது? | வ் |
| 58. | மெல்லின எழுத்துகள் எதனை இடமாகக் கொண்டு பிறக்கின்றன? | மூக்கு |
| 59. | பன்னிரண்டு உயிர் எழுத்துகளும் எங்கே பிறக்கின்றன? | மிடற்றில் |
| 60. | இகர ஒலியிலிருந்து தோன்றிய உயிர் ஒலி யாது? | எகர உயிர் ஒலி |
| 61. | நெடில் எழுத்துகளைத் தனித்துக் குறிப்பிடுவதற்கு எந்த எழுத்துச் சாரியையைப் பயன்படுத்துகிறோம்? | காரம் |
| 62. | ‘அ’கரம், ‘க’கரம் என்று கரச் சாரியையை எந்த வகை எழுத்துகளைக் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்த வேண்டும்? | குறில் எழுத்துகளைக் குறிக்க |
| 63. | தமிழில் உள்ள ஒலிகளை எத்தனை வகையாகப் பிரித்துள்ளனர்? அவை யாவை? | இரண்டு, உயிர் ஒலி, மெய் ஒலி |
| 64. | தொல்காப்பியம் குறிப்பிடும் ஒலி எழுப்பும் மூன்று பகுதிகள் எவை? | 1) தலை 2) மிடறு-குரல்வளை 3) நெஞ்சு-நுரையீரல்" |
| 65. | தமிழ் எழுத்துகளின் பிறப்பு உறுப்புகளாகத் தொல்காப்பியர் கூறுபவை எவை? | தலை, மிடறு, நெஞ்சு, பல், இதழ், நா, மூக்கு, அண்ணம் |
| 66. | பேச்சு உறுப்புகள் மொத்தம் எத்தனை? | 8 |
| | **புணரியல்** | |

| | | |
|---|---|---|
| 67. | இரண்டு சொற்கள் சேருவது எவ்வாறு அழைக்கப்படுகிறது? | புணர்ச்சி |
| 68. | இரண்டு சொற்கள் சேரும்போது ஏற்படும் மாற்றங்கள் எத்தனை? | 3 |
| 69. | இரண்டு சொற்கள் சேரும்போது ஏற்படும் மாற்றங்களைக் கூறுக. | தோன்றல், கெடுதல், திரிதல், இயல்பாதல் |
| 70. | இரண்டு சொற்கள் புணரும்போது ஒரு எழுத்து மற்றொரு எழுத்தாக மாறுவதைத் தொல்காப்பியர் எவ்வாறு கூறியிருக்கிறார்? | திரிதல் |
| 71. | புணர்ச்சியில் குன்றல் அல்லது கெடுதல் என்று எதைக் கூறுகிறோம்? | புணர்ச்சியில் ஒரு எழுத்து இல்லாமல் போவது |
| 72. | இரண்டு சொற்கள் புணரும் போது எவ்வித மாற்றமும் ஏற்படாவிட்டால் அது எவ்வாறு அழைக்கப்படுகிறது? | இயல்புப் புணர்ச்சி |
| 73. | பெயர்ச்சொற்கள் உருபு ஏற்று வேறுபட்ட பொருளைத் தருவதை எவ்வாறு அழைப்பர்? | வேற்றுமை. |
| 74. | தொல்காப்பியர் குறிப்பிடும் வேற்றுமை உருபுகள் எத்தனை? | 8 |
| 75. | 'கு' என்பது எத்தனையாவது வேற்றுமை உருபு? | 4 |
| 76. | இரண்டாவது வேற்றுமை உருபு எது? | ஐ |
| 77. | த், ட், ற், இன் ஆகியன எந்தக் காலத்திற்கு வரும் இடைநிலைகள்? | இறந்தகாலம் |
| 78. | எதிர்காலத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் இடைநிலை எழுத்துகள் எவை? | ப், வ் |
| 79. | கிறு, கின்று எந்தக் காலத்தைக் குறிக்க வருகின்றன? | நிகழ்காலம் |
| 80. | எழுவாய் வேற்றுமையின் உருபு எது? | எழுவாய் வேற்றுமைக்கு உருபு இல்லை. |
| 81. | பெயர், வினைகளின் பகுதி, விகுதிகளுக்கு இடையில் நிற்கும் உறுப்பு எது? | இடைநிலை |
| 82. | தமிழ் இலக்கணத்தில் திணை என்றால் என்ன? | பிரிவு (நிலப் பிரிவு, மக்கள் பிரிவு) |
| 83. | மக்கள் பிரிவைக் குறிக்கும் திணை எது? | உயர்திணை |
| 84. | விலங்கு, பறவை போன்றவை எந்த வகைத் திணை | அஃறிணை |
| 85. | தொல்காப்பியம் குறிப்பிடும் நான்கு வகை இலக்கணச் சொற்கள் எவை? | பெயர், வினை, இடை, உரி |
| 86. | பெயர்ச் சொல்லின் இயல்பு எது? | வேற்றுமையை ஏற்றல் |
| 87. | எந்த வகைச் சொல் காலத்தைக் காட்டும்? | வினைச்சொல் |
| 88. | வேற்றுமை உருபை ஏற்கும் சொல் பெயர்ச்சொல்லா? வினைச்சொல்லா? | பெயர்ச்சொல் |

| தொல்காப்பியமும் தொல்காப்பியரும் | | |
|---|---|---|
| 89. | தொல்காப்பியம் என்ற இலக்கண நூலின் ஆசிரியர் யார்? | தொல்காப்பியர் |

| | | |
|---|---|---|
| 90. | தொல்காப்பியத்தில் எத்தனை அதிகாரங்கள் உள்ளன? | மூன்று |
| 91. | தொல்காப்பிய அதிகாரங்களின் பெயர்கள் யாவை? | எழுத்து, சொல், பொருள் அதிகாரங்கள் |
| 92. | தொல்காப்பியம் எத்தனை வகையான இலக்கணங்களைக் கூறுகிறது? | ஐந்து |
| 93. | தொல்காப்பியம் கூறும் ஐந்து இலக்கணங்களும் எவை? | எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி |
| 94. | இலக்கியம் படைப்பதற்கான இலக்கணம் கூறும் அதிகாரம் எது? | பொருளதிகாரம் |
| 95. | தொல்காப்பியம் எத்தனை இயல்களைக் கொண்டது? | 27 |
| 96. | எழுத்ததிகாரம் எத்தனை இயல்களைக் கொண்டது? | 9 |
| 97. | தொல்காப்பியத்தின் ஒவ்வொரு அதிகாரத்திலும் எத்தனை இயல்கள் இடம்பெற்றுள்ளன? | 9 |
| 98. | தொல்காப்பிய எழுத்ததிகாரத்தின் முதல் இயல் எது? | நூன்மரபு |
| 99. | தொல்காப்பியத்தின் சார்பு நூல் ஒன்று கூறுக? | நன்னூல் |
| 100. | வேற்றுமையியல் என்ற இயல் எந்த அதிகாரத்தில் இடம்பெற்றுள்ளது? | சொல்லதிகாரம் |
| 101. | சொல்லதிகாரத்தின் முதல் இயல் எது? | கிளவியாக்கம் |
| 102. | உயிர்களின் வகைகள் பற்றி குறிப்பிடும் இயல் எது? | மரபியல் |
| 103. | சொல்லுக்கான பொருளை விளக்கும் இயல் எது? | உரியியல் |
| 104. | நன்னூல் என்ற இலக்கண நூல் எந்த நூலை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது? | தொல்காப்பியம் |
| 105. | தமிழரின் போர் முறையைப் பற்றி கூறும் இயல் எது? | புறத்திணையியல் |
| 106. | மற்ற மொழிகளில் இல்லாத இலக்கணமாகத் தொல்காப்பியத்தில் எந்த இலக்கணம் இடம்பெற்றுள்ளது? | பொருளிலக்கணம் |
| 107. | தொல்காப்பியத்தில் போன்ற இலக்கண நூல்களில் இடம்பெற்றுள்ள ஒவ்வொரு பாடல்களையும் எவ்வாறு அழைக்கிறோம்? | நூற்பா |
| 108. | சொற்களின் வகைகளான பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் ஆகியவற்றிற்குத் தனித்தனியாகத் தொல்காப்பியர் இயல் வகுத்துள்ளாரா? | ஆம் |